துவிச்சக்கர வண்டிகள் கையளித்தலும் காங்கேசன்துறைத் துறைமுகக் கப்பற் சிதைவுகள் அகற்றல்கள் முடிவடைந்தமை பற்றிய அறிவித்தலுக்குமான வைபவத்தில் இந்திய வெளியுறவு அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

(2012 ஜனவரி 18 – யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களே,

வெளியுறவு அமைச்சர் கௌரவ ஜீ.எல். பீரிஸ் அவர்களே,

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களே,

கௌரவ வட மாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி அவர்களே,

இந்திய உயர் ஸ்தானிகர் திரு அசோக் காந்தா அவர்களே,

இந்திய உதவித் தூதுவர் திரு மகாலிங்கம் அவர்களே

மேன்மை பொருந்திய விருந்தினர்களே மற்றும்

சீமாட்டிகளே, சீமான்களே,

யாழ்ப்பாணத்திற்குத் திரும்பவும் வருவது எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது. வட மாகாணத்தின் ஐந்து பிரதேசங்களிலுமுள்ள உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர்க்குத் துவிச்சக்கர வண்டிகளைக் கையளிக்கும் இந்த வைபவத்தில் பங்குபற்றுவது எனக்குமிகவும் மகிழ்ச்சியையளிக்கின்றது.

இந்திய வீடமைப்புத்திட்டத்தின்கீழ் முதல் தொகுதி வீடுகளை அவற்றின் பயனாளிகளுக்கு அரியாலையில் வழங்கிவிட்டு நான் இங்கே வந்துள்ளேன். இத்திட்டமானது இலங்கைகக்கான இந்தியாவின் அபிவிருத்தி உதவிகளில் முதன்மையானதும், உலகின் எப்பாகத்திலும் இந்தியாவால் முன்னெடுக்கப்படும் மிகப் பெரிய உதவித்திட்டமுமாகும். 2010 ஜூன் மாதத்தில் இலங்கை ஜனாதிபதி மாண்புமிகு மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் இந்திய விஜயத்தின்போது இந்தியப்பிரதமர் மாண்பு மிகு கலாநிதி மன்மோகன் சிங் அவர்கள் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் 50,000 வீடுகள் அமைப்பதற்கான கோரிக்கையை முன் வைத்தார்.

நேற்று அமைச்சர் பீரிஸ் அவர்களும் நானும் 260 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில இந்தியாவினால் மேற்கொள்ளப்படும் இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் மிகுதியான 49,000 வீடுகளை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டோம். இச் செயற்றிட்டத்தை நடைமுறைப் படுத்தும்போது விசேஷமாக பயனாளிகளைத் தேர்வதிலும் குறைபாடுகளைக் கையாள்வதிலும் மிகச் சிறந்த முறைகளைச் செயற் படுத்துவதே எம் இரு தரப்பினரதும் நோக்கமாகும்.

இலங்கை அரசாங்கத்திற்கும் விசேஷமாக இந்தச் செயற்றிட்டத்தின் முன்னோடிக் கட்டத்தின்போது அவசியத் திட்டத் தேவைகளில் எமக்குதவியளித்த வடமாகாணத்தின் ஐந்து அரசாங்க அதிபர்களுக்கும் அவர்களுடைய குழுவினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இச்செயற்றிட்டத்தின் அடுத்த கட்டத்தை நோக்கி நாம் நகரும்போது இன்னும் அதிகமாக அவர்களின் உதவியைக் கோருகின்றோம்.

ஐந்து பிரதேசங்களிலும் பத்தாயிரம் துவிச்சக்கர வண்டிகளை விநியோகித்தற்கான செயற்றிட்டம் இடம்பெயர்ந்தோரின் வருகையைத் தீவிரப்படுத்தும் இலங்கை அரசாங்கத்திற்கு அதன் ஒத்தழைப்பிற்காகவும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்திற்கு அமுலாக்கப் பங்காளியாக எம்முடன் இணைந்து பணியாற்றிமைக்காகவும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சீமாட்டிகளே சீமான்களே,

வட மாகாண மக்களுக்கும் முக்கியமாக யாழ்ப்பாண மக்களுக்கும் தென்னிந்திய மக்களுக்கும் விசேஷமானவோர் தொடர்புண்டு.

காங்கேசந்துறைத் துறைமுகத்தின் கப்பற் சிதைவுகள் அகற்றும் பணிகள் 19 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில செவ்வையே செய்து முடிக்கப்பட்டுள்ளமையை நான் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதன் மூலம் யாழ்ப்பாணத்தின் கடல் வாணிபம் அபிவிருத்தியடைவதோடு பொருளாதாரச் செயற்பாடுகளும் புத்துயிர் பெறும். அடுத்த கட்ட வேலைகளுக்காகத் தேவையான உதவியை வழங்குவதற்கு நாம் தயாராகவுள்ளோம். அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையைப் புனரமைக்கும் பணிகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம். இதன் மூலம் வட மாகாணத்தில் தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப் படுவதோடு யாழ்ப்பாணத்தில் கைத்தொழில் அபிவிருத்தியும் ஏற்படும்.

இலங்கை அரசாங்கம் ஓர் சிவில் போக்கு வரத்து விமான நிலையமாக பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்து இலங்கையினுள்ளும் இந்தியாவுடனுமான தொடர்புகளை புத்துயிர் பெறச் செய்யு மென

நம்புகிறோம். இது இரு நாடுகளின் பொருளாதாரத்திற்குப் பெரியதொரு செயலூக்கத்தை அளிக்கும்.

யாழ்ப்பாணத்தின் விளையாட்டுக் கட்டமைப்புக்களை மீளபிவிருத்தி செய்வதற்காக துரையப்பா விளையாட்டரங்கைச் செப்பனிடும் பணியை நாம் ஏற்றுள்ளோம். பொது நூலகத்திற்கு அருகாமையில் யாழ்ப்பாணக் கலாச்சார நிலையமொன்றை நிறுவவும் நாம் உத்தேசித்துள்ளோம். உத்தேச நிலையத்தின் வரைபடம் நேற்று மாலை எனக்குக் காண்பிக்கப் பட்டது. இந்த நிலையமானது கலாச்சாரத்தின் உருவமாகப் பரிணமித்து கலாச்சார நடவடிக்கைகளுக்குப் புத்துயிரளிக்குமென் நம்புகிறேன்.

நண்பர்களே,

மூன்று தசாப்த கால ஆயுதப் போராட்டத்திலிருந்து இலங்கை மீண்டெழுந்துள்ளது. இப்போது சமாதானம் மலர்ந்துள்ளது. ஆயுதப் போராட்டத்திலிருந்து இலங்கையை மீட்ட அதே மதி நுட்பமும் தலைமைத்துவமும் இலங்கையிலுள்ள சகல சமூகத்தினரிடையேயும் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அதிகாரப் பரவலாக்கத்தினூடான ஒரு உண்மையான அரசியல் தீர்வை நாடுவதில் ஈடுபட்டிருப்பர் என்பது எமது மனமார்ந்த நம்பிக்கையாகும்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை நாம் கவனத்திற் கொண்டுள்ளோம். அவற்றின் நடைமுறைப் படுத்தலை நாம் எதிர்பார்க்கின்றோம். தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பேச்சு வார்த்தைகள் 13வது திருத்தத்தின் அடிப்படையில் ஒரு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுப் பொதியை உருவாக்கி அதன் மூலம் நாட்டில் அரசியல் தீர்வுக்குத் தேவையானவோரு சூழலை உண்டுபண்ணு மென்பதும் எமது நம்பிக்கையாகும். இந்த செயல் முறைக்குத் தேவையான யாவற்றையும் இந்தியா செய்யும்.

இலங்கை அரசாங்கமும் வட மாகாணத்திலுள்ள மக்களும் மேற்கொள்ளும் சகல மீள்கட்டமைப்பு முயற்சிகளிலும் இந்திய அரசாங்கமும் அதன் மக்களும் தோளோடு தோள் கொடுத்து நிற்பர் என்பதை நான் இங்கு வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்

நன்றி.